# ஒலிநூல் செயற்றிட்டம்
# செயற்றிட்ட அறிக்கை - 2023

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | ஒலிநூல் செயற்றிட்டம் |
| செயற்றிட்ட எண் | NF/PG/2020/0073 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | ஆகஸ்ட் **2020** - ஆகஸ்ட் **2023** |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | Dr. செந்தில்குமார், நற்கீரன் லட்சுமிகாந்தன், சுபா பாலசுப்பிரமணியம், Let Us Help Now |
| முக்கிய பங்குத்தாரர்கள் | வாழ்வகம், நவீல்ட், தரிசனம், ஆசிரியர்கள், தன்னார்வலர்கள் |
| செயற்றிட்டச் செலவுகள் | LKR 178633.69 |

செயற்றிட்ட நோக்கம்

நூலக நிறுவனமானது noolaham.org / noolaham.media இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவு தொகுதிகளையும் ஆவணப்படுத்தி பாதுகாப்பதோடு அனைவருக்கும் முற்றிலும் இலவசமாக கிடைக்க செய்தலிலும் ஈடுபட்டுவரும் ஒரு தன்னார்வலர் தொண்டு நிறுவனமாகும். 2005 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இலங்கையில் பதிவு செய்யப்பட்டு (GA 239) தன்னார்வ பங்களிப்பாளர்களால் வழிநடத்தப்படும் நூலக நிறுவனம், உலகின் முதன்மை எண்ணிம ஆவண நிறுவனமாக திகழ்கின்றது. அவ்வாறே தமிழ் பேசும் சமூகங்களின் மாற்றுத்திறனாளிகளுக்கு அறிவுத்தளங்களை, ஒலி நூல் பதிவு மூலம் ஆவணப்படுத்தி பாதுகாத்து தேவையானவர்களிடம் கொண்டுசெல்லும் பணியே இவ் ஒலி நூல் செயற்றிட்ட பணியாகும்.

அந்த வகையில் மாற்றுத்திறனாளிகளின், பாடசாலை மாணவர்களுக்கு உதவும் முகமாக அவர்களுக்கு தேவையான பாடநூல்களை ஆவணப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. தமிழ் பேசும் சமூகங்களின் மாற்றுத்திறனாளிகளுக்கு அறிவுத்தளங்களை ஒலிநூற் பதிவு மூலம் ஆவணப்படுத்தி, பாதுகாத்து மக்களிடம் கொண்டு செல்லும் பணியாக இவ் ஒலிநூல் பதிவு செயற்றிட்டம் காணப்படுகிறது. பாடநூல்கள், அவற்றின் தரம் மாணவர்களின் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் பாவனைக்கு உகந்தமுறையில் அமைய வேண்டும் என்பதில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டு ஒலிப்பதிவு செய்யப்பட்டது.

சாதாரணமான மாணவர்களால் கூட தமது பாடத்திட்டத்தினை முழுமையாக நிறைவு செய்யமுடியாத இக்காலப்பகுதியில், மாற்றுத்திறனாளி மாணவர்களும் தமது கல்வியினை தொடர்வதற்கு மிகவும் சிரமப்பட்டு உள்ளனர். அவர்களுக்கான பாடநூல்கள் தமிழ் மொழியில் அச்சில் இல்லை என்பதனால் இவ்வாறானதொரு செயற்றிட்டமானது அத்தியாவசியமானதாகக் காணப்படுகிறது.

நிதி மற்றும் நெறிப்படுத்தல்

கனடா நூலக அமைப்பு குழுவில் உள்ள நக்கீரன் மற்றும் சுபாகரன் அவர்களின் உதவியுடன் நூலக நிறுவனத்தின் ஊடாக இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இச் செயற்றிட்டத்திற்கான நிதி உதவியானது Let us help now நிறுவனத்தின் ஊடாக வழங்கப்பட்டு வருகிறது.

செயற்பாடுகள்

- ஒலிநூற் வாசிப்பை ஒருங்கிணைத்தல்
- சீர்தரங்களுக்கு ஏற்ப ஒலிப் பதிவு செய்தல்
- ஒலிப் பதிவுகளை audacity அல்லது வேறு பொருத்தமான மென்பொருள் கொண்டு தொகுத்தல் (editing)
- நூலகம் பல்லூடகத்தில் தேவையான மீதரவுகளுடன் (metadata) பதிவேற்றல்
- நூலகச் செயற்றிட்ட அணியோடு சேர்ந்து இயங்கி, செயற்றிட்டத்தை வெற்றிகரமாக நகர்த்திச் செல்லல்
- செயற்றிட்ட மற்றும் நிறுவன அறிக்கையிடல் - Reporting போன்ற செயற்பாடுகள் இதனூடாக அடையப்பட்டன.
- 2020 ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. வாழ்வகம், நவீல்ட் , தரிசனம் ஆகிய இடங்களில் காணப்படும் மாற்றுத்திறனாளி மாணவர்களை மையப்படுத்தி இச்செயற்றிட்டம் முன்னகர்ந்தது.

ஒலிநூல் செயற்றிட்டத்தின் மூலமாக அடையப்பட்ட அடைவுகளை கீழேயுள்ள அட்டவணை எடுத்துக்காட்டுகிறது. இச் செயற்றிட்டத்தினூடக மூன்று வருட காலப்பகுதியில் 1,097 ஒலிநூல்கள் பதிவேற்றப்பட்டுள்ளன. இந்த நூல்கள் கல்வி சார்ந்ததாக தன்னை நிறுத்தி கொள்ளாது பல கதைகள், நாவல்கள் மற்றும் நாடகங்கள் என பரந்து காணப்படுகிறது.

| | ஆண்டு | அடைவு |
|---|---|---|
| 1 | 2020 | 96 |
| 2 | 2021 | 328 |
| 3 | 2022 | 566 |
| 4 | 2023 | 125 |
| **5** | மொத்தம் | **1,129** |

ஒலி நூல் செயற்றிட்டத்தினூடாக பலதரப்பட்ட மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர். இதில் குறிப்பாக கீழே குறிப்பிடப்படும் பாடசாலைகள் மற்றும் நிறுவனங்கள் நேரடியாக பயன் பெறுகின்றன.

ஒலி நூல் செயற்றிட்டத்தின் பயனாளர்கள்

- வாழ்வகம்
- நவீல்ட் பாடசாலை
- உதயம் விழிப்புணர்வு அற்றோர் நிறுவனம்
- தரிசனம்
- வடக்கு மாகாண கல்வி திணைக்களம் பாடசாலைகள்
- யாழ் விழிபுலன் வலுவிழந்தோர் சங்கம்
- யாழ் பல்கலைக்கழகம்

எதிர்கொண்ட சவால்கள்

- வாசிப்பதற்கான ஆசிரியர்களை/ எடுத்துரைஞர்களை இனங்காணுதல் பெரும் சவாலாகவே இருந்தது.
- ஆசிரியர்கள்/ எடுத்துரைஞர்களுக்கான கொடுப்பனவு இல்லாமை: ஆசிரியர்கள்/ எடுத்துரைஞர்கள் சில சந்தர்ப்பங்களில் நீண்ட தூரங்கள் பயணம் செய்து ஒலிநூல்களை பதிவு செய்ய வேண்டியுள்ளது. இதனால் பல தன்னார்வலர்கள் இச் சேவையை செய்ய சிறிது தயக்கம் காட்டுகின்றனர். அத்துடன் அவர்களுக்கு அருகிலும் ஒலிப்பதிவு செய்யக் கூடிய வசதிகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.
- மாணவர்களுக்கு புலன் மாறுபடாதவகையில் சத்தங்கள் இரைச்சல் இல்லாமல் ஒலிப்பதிவு செய்வது.
- ஆரம்பகாலங்களில் ஒலிப்பதிவு செய்வதற்கான ஒலிப்பதிவுக்கு உகந்த பல்லூடக அறை இல்லாமையால் வாழ்வகம் , நவீல்ட் யாழ் இந்து மகளிர் கல்லூரி, கோண்டாவில் பாடசாலைகளுக்கு சென்று ஒலிப்பதிவு செய்யவேண்டி காணப்பட்டது. 2023 இற்கு பின்னர் நூலகத்தில் பல்லூடக அறை ஒழுங்கமைக்கப்பட்டது.
- ஒலிப்பதிவினை மாணவர்களுக்கு கிடைக்கச் செய்வது சவாலான விடயமாக காணப்பட்டது. ஏனெனில் அவர்களாகவே ஒலிப்பதிவை தரவிறக்கம் செய்து பயன்படுத்துபவரின் எண்ணிக்கை குறைவாகவே காணப்பட்டது. பாடசாலை மாணவர்களாகக் காணப்படாததால் தொழில்நுட்ப கருவி கிடைக்காமை.
- பல்கலைகழக மாணவர்களுக்கான ஒலிநூலாக்கம் செய்யும் போது நூலாசிரியர் அனுமதி, நூலக விதிக்கமைய நூல் தெரிவு

கற்றல்களும் பரிந்துரைகளும்

- வாசிப்பதற்கான ஆசிரியர்களை இனங்கண்டு பட்டியலிடல்
- பாடசாலை மட்டத்தினைத் தாண்டி பல்கலைக்கழக ஆவணங்களையும் வாசிப்பதற்கான முன்னகர்வுகளை மேற்கொள்ளல்: பல்கலைக்கழகம்

மற்றும் வலய பாடசாலைகள் நூலக நிறுவனத்துடன் இணைந்து ஒலிநூல் செயற்றிட்டத்தினை மேலும் சிறப்புற கொண்டு செல்லல்.

1. பல்கலைக்கழகம் தனது வளங்களை தந்து உதவுதல்.
2. தன்னார்வர்களை இனங்காண்பதில் உதவுதல்.
3. வலய பாடசாலைகள் ஒலிப்பதிவு செய்யப்பட வேண்டிய நூல்களை பரிந்துரை செய்தல்.
4. பாட நூல்களைத் தாண்டி ஒலிப்பதிவு செய்யப்பட வேண்டிய ஏனைய முக்கியமான நூல்களை பரிந்துரை செய்தல்.

- பல்கலைக்கழகம், மற்றும் கல்வி வலயங்கள் இடையே சிறந்த தொடர்பாடல்களை ஏற்படுத்துவதன் ஊடாக செய்யப்பட்ட வேலைகள் அனைத்தும் உரியவர்களுக்கு சென்றடைந்துள்ளன என்பதை உறுதிப்படுத்துவதுடன் எதிர்கால பணிகளை செய்வதற்கும் உதவியாக இருக்கும்.

முடிவுரை

ஒலிநூல் செயற்றிட்டமானது 2020 ஆம் ஆண்டு தொடக்கம் நூலக நிறுவனத்தினால் வெற்றிகரமாக கொண்டு செல்லப்பட்ட ஒரு செயற்றிட்டமாகும். இச் செயற்றிட்டத்தினூடாக இதுவரை 1,097 ஒலிநூல்கள் பதிவேற்றப்பட்டுள்ளன. இவ் நூல்கள் விழிப்புலன் அற்றவர்களுக்கு அவர்களது கல்விசார் மற்றும் கல்விசாரா தேடல்களுக்கு உறுதுணையாக இருக்கிறன. இச் செயற்றிட்டத்தின் அவசியம் விழிப்புலன் அற்றவர்கள் சமூகத்தில் அதிகமாக உள்ளது. அத்துடன் ஒலிநூல் என்ற பரப்பில் செய்யப்பட வேண்டிய பணிகள் நிறைய உள்ளன. நூலக நிறுவனமானது குறிப்பிடத்தக்க வெற்றிடங்களை பூர்த்தி செய்துள்ளது எனலாம்.

இச் செயற்றிட்டமானது பொருத்தப்பாடான ஊழியர் மற்றும் நிதி உதவி கிடைக்கும் பட்சத்தில் தொடர்ந்து கொண்டு செல்லப்படும்.

பின்னிணைப்புக்கள்

ஒலிநூல்கள்